**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.252/2018</u>**

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கவிதா | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 02.12.2022

**P.W. : 1**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

கொடை ஆவணத்தின் அசல் ஆவணம் 1, 2 பிரதிவாதிகளிடம் தான் உள்ளது என்று என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் மற்றும் அந்த அசல் ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் இந்த இரண்டில் எது உண்மையானது என்று சொன்னால் 1,2 பிரதிவாதிகளிடம் உள்ள ஆவணம் தான் உண்மையான ஆவணமாகும். நான் வழக்கு தாக்கல் செய்தபோது 3ம் பிரதிவாதி என்னை ஏமாற்றிய விவரம் எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதி ஏமாற்றியதை பொறுத்து நான் ஏதேனும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் நான் கொடுக்கவில்லை. ஆனால் என் அப்பா 3ம் பிரதிவாதியின் மேல் புகார்

கொடுத்துள்ளார். தற்போது 3ம் பிரதிவாதி சென்னையில் உள்ளார். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். ஆனால் புகார் கொடுத்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி 2011க்கு பிறகு விவசாயம் செய்து வந்த சமயத்தில் என் அம்மாவிற்கு 1ம் பிரதிவாதி ஏமாற்றிவிட்டார் என்பதை பற்றி தெரியாதா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களின் பட்டாவை என் அம்மாவின் பெயரில் தற்போதும் உள்ளது என்பதை நிரூபிப்பதற்காக நான் அந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2008 காலக்கட்டத்தில் ஆவணங்கள் பதிவு செய்யும் சமயத்தில் புகைப்படம் ஒட்டும் பழக்கம் இருந்ததா என்றால் இல்லை. காட்டுப்புத்தூர் சார்பதிவாளர் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்படுகிறார் என்று குற்றம் சுமத்தும் நிலையில் அதனை பொறுத்து நான் புகார் செய்தேனா என்றால் இல்லை. குறிப்பிட்டு எந்த தேதி மாதம் வருடம் நானும் என் அம்மாவும் ஏமாந்தோம் என்று எனக்கு தெரியுமா என்றால் 2019ம் வருடம் 9வது மாதம் தேதி சரியாக தெரியவில்லை.

**(குறுக்கு விசாரணை செய்த வழக்கறிஞர் எம்.விஜயகுமார் அவர்களின் ஜூனியர் என்று முன்னிலைப்படுத்தும் நிலையில் குறுக்கு விசாரணை செய்த வழக்கறிஞர் எஸ். நவநீத கிருஷ்ணன் வக்காலத்து இல்லாத காரணத்தினால் அவர் குறுக்கு விசாரணை செய்ய முடியாது என்று வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்ததன்பேரில் குறுக்கு விசாரணை நிறுத்தப்படுகிறது).**